Dhinathdhalam@gmail.com

www.dhinathdhalam.com

**விளம்பரதாரர்கள் தேவை**

தமிழகம் முழுவதும் 234 சட்டமன்ற தொகுதிகளுக்கும் செய்தி – விளம்பரம் சேகரிக்க முழு நேர – பகுதி நேர பணிக்கு தகுந்த ஆட்கள் தேவை.

☎ 9 111 222 654

# தினத்தளம்

PRGI NO: TNBIL/25/A3556

நடுநிலை நாளிதழ்

DHINATH DHALAM Tamil & English daily Paper

**செய்தியாளர்கள் தேவை**



தமிழகம் முழுவதும் மாவட்டம் & தாலுகா வாரியாக சந்தாதாரர் அடிப்படையில் ஆண்/பெண் நிருபர்கள் தேவை

☎ 94440 82959

ஆசிரியர் : முனைவர். எஸ்.மோகன்ராஜ் M.A.,PGDJMC.,Ph.D.,

நிர்வாக ஆசிரியர் : முனைவர். எம்.ஹரிகிருஷ்ணன் B.A.,

மலர் Volume : 01 · இதழ் Issue : 064 · புதன்கிழமை Wednesday · 03.06.2026 · பக்கங்கள் Pages:4 · ₹ 6 · ஈரோடு Erode

# முதலமைச்சர் விஜய்யுடன் ப.சிதம்பரம் சந்திப்பு



சென்னை: தமிழக அரசியலில் பெரும் பரபரப்பையும் எதிர்பார்ப்பையும் ஏற்படுத்தும் விதமாக, தமிழக முதலமைச்சர் விஜய்யை, காங்கிரஸ் கட்சியின் மூத்ததலைவரும் முன்னாள் மத்திய அமைச்சருமான ப.சிதம்பரம் நேரில் சந்தித்துப் பேசியுள்ளார். சென்னைதலைமைச் செயலகத்தில் நடைபெற்ற இந்த சந்திப்பு, தற்போதைய அரசியல் சூழலில் மிக முக்கியத்துவம் வாய்ந்ததாகப் பார்க்கப்படுகிறது. தமிழகத்தில் ஆட்சி மாற்றம் ஏற்பட்டு, முதலமைச்சராக விஜய் பொறுப்பேற்ற பிறகு, பல்வேறு அரசியல் கட்சித் தலைவர்களும் முக்கியப் பிரமுகர்களும் அவரை நேரில் சந்தித்து வாழ்த்துகளைத் தெரிவித்து வருகின்றனர். அந்த வகையில், சென்னை தலைமைச் செயலகத்திற்கு வருகை தந்த காங்கிரஸ் மூத்த தலைவர் ப. சிதம்பரம், முதலமைச்சர் விஜய்க்கு பொன்னாடை போர்த்தி, வாழ்த்துக் கூறி, ஒரு சிறப்புப் பரிசினையும் வழங்கினார். முதலமைச்சர் விஜய்யும் ப.சிதம்பரத்தை இன்முகத்தோடு வரவேற்று, அவரது வாழ்த்துகளுக்குத் தன் நன்றியைத் தெரிவித்துக் கொண்டார். மரியாதை நிமித்தமாக நடைபெற்றது என்று அதிகாரப்பூர்வமாகத் தெரிவிக்கப்பட்டாலும், இதன் பின்னணியில் மிக முக்கியமான அரசியல் விவாதங்கள் நடைபெற்றிருக்கலாம் என்று நம்பத் தகுந்த வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. குறிப்பாக, ஜூன் 18ம் தேதி நடக்க இருக்கும் ராஜ்யசபா (மாநிலங்களவை) தேர்தல் தொடர்பாக இரு தலைவர்களும் விரிவாகப் பேசியிருக்கலாம் எனத் தகவல்கள் கசிந்துள்ளன. நாடாளுமன்ற மேலவை உறுப்பினர்களைத் தேர்ந்தெடுப்பதில் தமிழக சட்டமன்ற உறுப்பினர்களின் பலம் முக்கியப் பங்கு வகிக்கும் என்பதால், இந்தத் தேர்தல் வியூகங்கள் மற்றும் கூட்டணிக் கட்சிகளுக்கிடையேயான இடப் பகிர்வு குறித்து இப்போதே ஆலோசனைகள் தொடங்கப்பட்டிருக்கலாம் என்று அரசியல் விமர்சகர்கள் கருதுகின்றனர்.

தவெக ஆட்சி அமைக்க முதல் ஆளாக தனது ஆதரவை வழங்கியது காங்கிரஸ். இதற்கு பதிலாக தமிழக அமைச்சரவையில் காங்கிரசிற்கு இடம் அளித்தது தவெக. அதிமுக.,வை சேர்ந்த சி.வி.சண்முகம் தனது ராஜ்யசபா எம்.பி., பதவியை ராஜினாமா செய்ததால், அந்த இடம் காலியாக உள்ளதாக அறிவிக்கப்பட்டு ஜூன் 18ம் தேதி தேர்தல் நடத்தப்பட உள்ளதாக தேர்தல் கமிஷன் அறிவித்துள்ளது. இதற்கான வேட்புமனு தாக்கல் நேற்று துவங்கி உள்ளது. இருந்தும் இதுவரைதமிழகஅரசியல் கட்சிகள் எதுவும் அதிகாரப்பூர்வமாக தங்களின் வேட்பாளர்களை அறிவிக்கவோ, வேட்புமனு தாக்கல் செய்யவோ இல்லை.

107 எம்எல்ஏ.,க்களை தங்கள் வசம் வைத்துள்ள தவெக தலைவரும், முதல்வருமான விஜய்யை ப.சிதம்பரம் சென்று சந்தித்துள்ளது முக்கியத்துவம் வாய்ந்ததாக கருதப்படுகிறது. ஆட்சியில் கூட்டணி வைத்துள்ள கட்சி என்ற அடிப்படையில் இந்த ராஜ்யசபா சீட்டை தவெக, காங்கிரசிற்கு ஒதுக்க உள்ளதா என்ற கேள்வியும் இதனால் எழுந்துள்ளது.

# பா.ஜ.க.வில் இருந்து அண்ணாமலை விலகல்



கர்நாடக மாநிலத்தில் இளம் ஐ.பி.எஸ். அதிகாரியாக, காக்கி உடையில் அதிரடி காட்டிய அண்ணாமலை, அந்தப் பதவியை ராஜினாமா செய்துவிட்டு 2020-ம் ஆண்டு பா.ஜ.க.வில் இணைந்தார். தனது அதிரடி பேச்சால் இளைஞர்களை ஈர்த்த அவர், குறுகிய காலத்திலேயே தமிழக பா.ஜ.க.தலைவராக நியமிக்கப்பட்டார்.

2024-ம் ஆண்டு நடைபெற்ற நாடாளுமன்ற தேர்தலில், தமிழகத்தில் பா.ஜ.க.வின் வாக்கு வங்கி 11 சதவீதம் என்ற அளவுக்கு உயர்ந்தது. ஆனால், திடீரென 2026 சட்டசபை தேர்தலுக்கு முன்பாக தமிழக பா.ஜ.க. தலைவர் பதவியில் இருந்து அண்ணாமலை மாற்றப்பட்டார். இதற்கு அ.தி.மு.க. கொடுத்தஅழுத்தம்தான் காரணம் என்று சொல்லப்படுகிறது.

என்றாலும், சட்டசபை தேர்தலில் களம் காண அண்ணாமலை ஆர்வமாக இருந்தார். கோவை வடக்கு அல்லது திருப்பூர் வடக்கு ஆகிய தொகுதிகளில் ஒன்றில் அவர் போட்டியிடுவார் என்று எதிர்பார்க்கப்பட்டது. ஆனால், 2 தொகுதிகளும் வழங்கப்படவில்லை. இதனால், கடும் அதிருப்தியில் அண்ணாமலை இருந்து வந்தார்.

சட்டசபைதேர்தலிலும் முழு வீச்சில் அவர் பிரசாரத்தில் ஈடுபடவில்லை. அ.தி.மு.க. கூட்டணியில் 27 தொகுதிகளில் போட்டியிட்ட பா.ஜ.க. ஒன்றில் மட்டுமே வெற்றி பெற்றது. வாக்கு சதவீதமும் 2 சதவீதமாக அதிரடியாக சரிந்தது.

இந்தநிலையில், அண்ணாமலையின் ஆதரவாளர்கள் அவரை தனிக்கட்சி தொடங்கக் கோரி வலியுறுத்தி வந்தனர். அவரும் பதில் எதுவும் சொல்லாமல் அமைதி காத்து வந்தார். பா.ஜ.க. தலைமையும் அவரை சமரசம் செய்யும் பணியில் ஈடுபட்டு வந்தது. இந்த நிலையில், கடந்த வாரம் பா.ஜ.க. அரசின் மும்மொழிக் கொள்கைக்கு திடீரென எதிர்ப்பு தெரிவித்து அறிக்கை வெளியிட்டு அண்ணாமலை பரபரப்பை ஏற்படுத்தினார்.

இதனால், பா.ஜ.க.வை விட்டு அண்ணாமலை வெளியேறப்போவது உறுதி என்று அரசியல் வட்டாரத்தில் பரபரப்பாக பேசப்பட்டது. இந்த நிலையில், நேற்று டெல்லி செல்வதற்காக சென்னை விமான நிலையம் வந்த அண்ணாமலை, பா.ஜ.க. கொடியில்லாத காரில் வந்தார்.

இதுகுறித்தும், புதிய கட்சி தொடங்கப்போவதாகவரும்தகவல் குறித்தும் நிருபர்கள் அண்ணாமலையிடம் கேள்வி எழுப்பினர். அதற்கு பதில் அளித்த அவர், 2 நாட்கள் கழித்து அனைத்து கேள்விகளுக்கும் பதில் சொல்கிறேன், விரிவாக பேசலாம்" என்று கூறிச் சென்றார். அதாவது, நிருபர்கள் கேட்ட கேள்வியை அவர் மறுக்கவில்லை என்பதால், 2 நாட்களில் ஏதோ நடக்கப்போகிறது? என்பது மட்டும் தெரிகிறது.

இந்நிலையில் டெல்லி சென்றுள்ள அண்ணாமலை, பா.ஜ.க. தேசிய தலைவர் நிதின் நபினை சந்தித்து, தமிழக பா.ஜ.க. குறித்து கடிதம் அளித்ததாக தகவல் வெளியாகி உள்ளது.

தமிழக பா.ஜ.க.வில் நடக்கும் உட்கட்சி விவகாரங்கள், உட்கட்சி மோதலில் ஈடுபடுவது யார், யார்.?, தான் ஒதுக்கப்பட்டதன் பின்னணி, பா.ஜ.க.வின் தோல்விக்கான காரணங்கள் என பல முக்கிய விஷயங்களை அந்த கடிதத்தில் குறிப்பிட்டுள்ளதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதனிடையே மத்திய உள்துறைமந்திரிஅமித்ஷாவையும் அண்ணாமலை சந்தித்து பேச வாய்ப்பு இருப்பதாக கூறப்படுகிறது. முன்னதாக டெல்லி பா.ஜ.க. தலைவர்கள், அண்ணாமலையை தொலைபேசி மூலம்தொடர்புகொண்டு சமாதானம் செய்து வருவதாகவும் தகவல் தெரிவிக்கப்பட்டிருந்தது.

இந்தநிலையில், டெல்லியில் பாஜக தேசிய தலைவர நிதின் நபினை சந்தித்து விலகல் கடிதத்தை அண்ணாமலை அளித்ததாக தகவல் வெளியாகி உள்ளது. தமிழ்நாடு பாஜகவின் முன்னாள் தலைவரான அண்ணாமலை கட்சியில் இருந்து விலகினார். டெல்லியில்பாஜகதேசிய தலைவர் நிதின் நபினை அண்ணாமலை சந்தித்து பேசி இருந்தார்.

தொடர்ந்து மத்திய உள்துறை மந்திரியும் பாஜக மூத்த தலைவருமான அமித்ஷாவை அவரது வீட்டில் அண்ணாமலைசந்தித்து உள்ளார். பாஜகவில் இருந்து விலகியது ஏன்? என்பது குறித்து அமித்ஷாவிடம் விளக்கம் அளித்ததாக கூறப்படுகிறது. இதனிடையே நிதின் நபின் மற்றும் அமைப்புச் செயலாளர் பி.எல். சந்தோஷ் ஆகியோருடனான ஒரு முக்கிய சந்திப்பின் போது, அண்ணாமலை சுமூக மான முறையில் கட்சியிலிருந்து விலக விரும்புவதாகத் தெரிவித்ததாகக் கூறப்படுகிறது. அவர் கட்சித் தலைமையிடம், இனி தனது விருப்பப்படியே இருக்க விரும்புவதாக தெரிவித்தார். இருப்பினும், அண்ணாமலையை தொடர்ந்து கட்சியில் நீடிக்கச் செய்வதற்கான முயற்சிகளை பாஜக தலைமை இன்னும் பரிசீலித்து வருகிறது, மேலும் அவருக்கு ஒரு தேசிய அளவிலான பொறுப்பும் வழங்கப்பட உள்ளதாக கூறப்படுகிறது. அடுத்த அறிவிப்பு வரும் வரை டெல்லியை விட்டு வெளியேற வேண்டாம் என்று அண்ணாமலையிடம் பாஜக தலைமை கேட்டுக் கொண்டதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

**வரி விளம்பரங்கள்**



தினத்தளம்

DHINATH DHALAM

மணமாலை · கோவில் திருவிழா · அரசியல் நிகழ்வுகள்
கல்வி · திருமண நாள் · பிறந்த நாள் · ஆண்டு விழா
திறப்பு விழா · வீட்டு சுப நிகழ்ச்சிகள் · நினைவு நாள்
ரியல் எஸ்டேட் · பைனான்ஸ் · நகைக்கடன்
வேலை வாய்ப்பு · ஆட்டோமொபைல்

தொடர்புக்கு : ☎ +919444082959

# ஈரோடு, சேலம், தர்மபுரி, கிருஷ்ணகிரி, திருப்பத்தூர் உள்ளிட்ட மாவட்டங்களில் கனமழைக்கு வாய்ப்பு



சென்னை வானிலை ஆய்வு மையம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்திருப்பதாவது:-

தென்மேற்கு பருவமழை கேரளப்பகுதிகளில் ஜூன் 4-ம் தேதி வாக்கில் துவங்க வாய்ப்புள்ளது.

சுமார் 5.8 கி.மீ. உயரம் வரை தெற்கு கேரள கடலோரப்பகுதிகளுக்கு அப்பால் உள்ள தென்கிழக்கு அரபிக்கடல் பகுதிகளின் மேல் ஒரு வளிமண்டல சுழற்சி நிலவுகிறது.

சுமார் 0.9 கி.மீ. உயரத்தில் கிழக்கு மத்தியப் பிரதேசம் மற்றும் அதனை ஒட்டிய சத்தீஸ்கர் பகுதிகளில் மேல் நிலவும் வளிமண்டல சுழற்சியிலிருந்து வடக்கு தமிழகம் வரை விதர்பா, தெலங்கானா மற்றும் ராயலசீமா வழியாக ஒரு வளிமண்டல காற்றழுத்த தாழ்வு பாதை (Trough) நிலவுகிறது.

தமிழகத்தில் ஒருசில இடங்களிலும், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளிலும் இடி, மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும். நீலகிரி, கோயம்புத்தூர், தேனி, திருப்பூர், தென்காசி, திண்டுக்கல், திருநெல்வேலி, கன்னியாகுமரி, ஈரோடு, சேலம், தர்மபுரி, கிருஷ்ணகிரி, திருப்பத்தூர், வேலூர், ராணிப்பேட்டை மற்றும் திருவண்ணாமலை மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் இடி, மின்னல் மற்றும் பலத்த காற்றுடன் (மணிக்கு 40 முதல் 50 கிலோ மீட்டர் வேகத்தில்) கூடிய கனமழை பெய்யக்கூடும் அதிகபட்ச வெப்பநிலை பற்றிய முன்னறிவிப்பு:

24மணி நேர அதிகபட்ச வெப்பநிலை மாறுதல்:

02-06-2026 முதல் 06-06-2026 வரை: தமிழகம், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளில் அதிகபட்ச வெப்பநிலையில் குறிப்பிடத்தக்க மாற்றத்திற்கானவாய்ப்புகுறைவு.

இயல்பு நிலையிலிருந்து அதிகபட்ச வெப்ப அளவின் வேறுபாடு:

02-06-2026: வடக்கு உள் தமிழகத்தில் அதிகபட்ச வெப்பநிலை ஓரிரு இடங்களில் 2° செல்சியஸ் இயல்பை விட அதிகமாக இருக்கக்கூடும். ஏனைய தமிழகம், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளில் அதிகபட்ச வெப்பநிலை இயல்பை ஒட்டியே இருக்கக்கூடும்.

03-06-2026 முதல் 06-06-2026 வரை: தமிழகம், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளில் அதிகபட்ச வெப்பநிலை இயல்பை ஒட்டியே இருக்கக்கூடும்.

சென்னை மற்றும் புறநகர் பகுதிகளுக்கான வானிலை முன்னறிவிப்பு:

வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும். நகரின் ஒரிரு பகுதிகளில் இடி, மின்னலுடன் கூடிய லேசான மழை பெய்ய வாய்ப்புள்ளது. அதிகபட்ச வெப்பநிலை 39-40° செல்சியஸை ஒட்டியும், குறைந்தபட்ச வெப்பநிலை 28-29° செல்சியஸை ஒட்டியும் இருக்கக்கூடும்.

செய்திகள் உடனுக்குடன் படிக்க

தினத்தளம்

DHINATH DHALAM

வாட்ஸ் அப் குரூப்பில் இணையுங்கள்

Join my WhatsApp group.
https://chat.whatsapp.com/CgGZM7snNtZ0QMr6or5zVx?mode=wwt

# தேனியில் மாவீரன் K.S.மகேந்திரன் நினைவேந்தல் நிகழ்ச்சி அதிமுக கிழக்கு மாவட்ட செயலாளர் முருக்கோடை ராமர் தலைமையில் நூற்றுக்கும் மேற்பட்டோர் பங்கேற்பு



தேனியில் மாவீரன் K.S.மகேந்திரன் நினைவேந்தல் நிகழ்ச்சி, அதிமுககிழக்கு மாவட்ட செயலாளர் முருக்கோடை ராமர் தலைமையில் நூற்றுக்கும் மேற்பட்டோர் பங்கேற்பு.

தன் இறுதி மூச்சு வரை கழகத்தையே சுவாசித்து நேசித்து, கழகத்திற்காக தனது இன்னுயிரை நீத்த தஞ்சாவூர் கிழக்கு மாவட்ட வர்த்தக அணி இணைச் செயலாளர் மாவீரன் K.S.மகேந்திரன் அவர்களின் நினைவாக அவருக்கு அனைத்து மாவட்டங்களிலும் நினைவஞ்சலி நடத்தப்பட வேண்டும் என்று அதிமுக பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிச்சாமி அவர்கள் வலியுறுத்தியிருந்தார்.

அதன்படி தேனியில் திருவுருவப்படத்திற்கு மாலை அணிவித்து நினைவஞ்சலி செலுத்தும் நிகழ்ச்சி நடைபெற்றது.

அதிமுக தேனி கிழக்கு மாவட்ட செயலாளர் முருக்கோடை ராமர் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்ச்சியில்,தேனி நகர செயலாளர் கிருஷ்ணகுமார் ஏற்பாட்டின் பேரில் தேனி நேரு சிலை அருகே அலங்கரித்து வைக்கப்பட்டிருந்த மாவீரன் K.S.மகேந்திரன் அவர்களின் திருவுருவப்படத்திற்கு கழக நிர்வாகிகள் மலர் தூவி நினைவஞ்சலி செலுத்தினார்கள்.

முன்னதாக தலைமைக் கழக பேச்சாளர் வடுகபட்டி சுந்தரபாண்டியன் மாவீரன் K.S.மகேந்திரன் அவர்களது தியாகத்தை போற்றி அவரின் பெருமைகளை எடுத்துக் கூறி அவருக்கு புகழஞ்சலி செலுத்தப்பட்டது.இதனைத் தொடர்ந்து இரண்டு நிமிடம் மௌன அஞ்சலி செலுத்தப்பட்டு,அவரது கனவை நினைவாக்கும் வகையில்,

கழகப் பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிச்சாமி அவர்களின் தலைமையில் மீண்டும் கழக ஆட்சி அமைக்க ஒரு மனதாக உறுதிமொழியும் எடுக்கப்பட்டதுடன்,

கழகத்தை உடைக்க சகுனி வேலை பார்த்து வரும் முதலமைச்சர் விஜய் தலைமையிலான தவெக அரசுக்கு கண்டனம் தெரிவிக்கப்பட்டதுடன், அனைத்து சூழ்ச்சிகளையும் முறியடித்து கழகப் பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிச்சாமி அவர்களின் தலைமையில் மீண்டும் கழகம் வெற்றி நடை போடும் என்றும்

கழகத்தினர் அனைவரும் ஒற்றுமையாக இருந்து மீண்டும் கழக ஆட்சி அமைய பாடுபட வேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

இந்த நிகழ்ச்சியில் கழக அம்மா பேரவை இணைச் செயலாளர் ஜெயக்குமார், கழக மருத்துவ அணி இணைச் செயலாளர் டாக்டர் அனுமந்தன், கழக விவசாய பிரிவு துணைச்செயலாளர் பெரியவீரன், தலைமைக் கழக பேச்சாளர் வடுகபட்டி சுந்தரபாண்டியன்,மாவட்ட கழக அவைத்தலைவர் முருகன்,மாவட்ட கழக இணைச் செயலாளர் முத்துலட்சுமி,மாவட்டக் கழகத் துணைச் செயலாளர்கள் சோலைராஜ்,மற்றும் அங்குசெல்வி,

மாவட்ட கழக பொருளாளர் வைகைபாண்டி, ஆண்டிபட்டி கிழக்கு ஒன்றிய செயலாளர் வரதராஜன், கடமலை மயிலை வடக்கு ஒன்றிய செயலாளர் செந்தட்டி காளை, சின்னமனூர் மேற்கு ஒன்றிய செயலாளர் எல்லப்பட்டி முருகன்,பெரியகுளம் கிழக்கு ஒன்றிய செயலாளர்ராஜகுரு,கூடலூர் நகர் கழக செயலாளர் அருண்குமார், பெரியகுளம் நகர் கழக செயலாளர் பழனியப்பன்,

மாவட்ட எம்ஜிஆர் மன்ற செயலாளர் முத்துகிருஷ்ணன்,மாவட்ட எம்ஜிஆர் இளைஞர் அணி செயலாளர் ஜெயப்பிரகாஷ், மாவட்ட வர்த்தக அணி செயலாளர் ஆப்பிள் முருகன், மாவட்ட இளைஞர் மற்றும் இளம்பெண்கள் பாசறை செயலாளர் அப்பாஸ் மைதீன், மாவட்ட தகவல் தொழில்நுட்ப பிரிவு செயலாளர் துரைப்பாண்டி,மாவட்ட அமைப்பு சாரா ஓட்டுநர் அணி செயலாளர் சுரேஷ்,

பேரூர் கழகச் செயலாளர்கள் அருண்மதி கணேசன்,மனோகரன் மற்றும் தேனி நகர் கழகத் துணைச் செயலாளர் சுந்தரபாண்டியன், கூடலூர் நகர் கழக துணை செயலாளர் பாளைராஜா, பெரியகுளம் நகர் கழக துணை செயலாளர் வெங்கடேசன் உள்ளிட்ட ஏராளமான கழக நிர்வாகிகள் பங்கேற்றனர்.



தூத்துக்குடி தெற்கு மாவட்ட திமுக தொழிலாளரணி துணை அமைப்பாளர் அந்தோணி தனுஷ் பாலன் அவர்களின் மகன் சிம்சன் காந்தி மைக்கேலின் சுவேதா இணையரின் திருமணம் அண்மையில் நடைபெற்றது. திமுக துணை பொதுச் செயலாளரும் நாடாளுமன்ற திமுக குழு தலைவருமான கனிமொழி கருணாநிதி நேற்று மணமக்களை நேரில் சந்தித்து வாழ்த்தினார். இந்த நிகழ்வில் முன்னாள் அமைச்சர் அனிதா ராதாகிருஷ்ணன், பை.மூ.ராமஜெயம், அஜிதா ஆக்னல், ஒன்றிய துணை செயலாளர் கணேசன், மாவட்ட சுற்றுசூழல் அணி அமைப்பாளர் பொன்பாண்டி ரவி, மாவட்ட வர்த்தகர் அணி பிளோமின்ராஜ், மாவட்ட இளைஞரணி ஸ்டாலின், ஒன்றிய இளைஞரணி பால்துரை, ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர் நெல்சன், ஒன்றிய சுற்றுசூழல் அணி ராஜேந்திரன், மற்றும் கழக நிர்வாகிகள் பலர் உடனிருந்தனர்.

# சிவகங்கையில் சமூக சேவகி அஞ்சலை அம்மாள் உருவப்படத்திற்கு மலர் தூவிய எம்.எல்.ஏ குழந்தைராணி நாச்சியார்.



தமிழக முதல்வர் அவர்களின் அறிவுறுத்தலின்படி கழகப் பொதுச் செயலாளர் அமைச்சர் ஆனந்த் அவர்களின் வழிகாட்டுதலின்படி தமிழக வெற்றிக்கழகம் கட்சியின் தெற்கு மாவட்டம்சார்பாகசமூகசேவகி அஞ்சலையம்மாள் அவர்களின் பிறந்தநாளைமுன்னிட்டு அவரின் திருவுருவப்படத்திற்கு மரியாதை செலுத்தும் நிகழ்ச்சி நடைபெற்றது. கட்சியின் கொள்கைத் தலைவர்களில் ஒருவரான அஞ்சலை அம்மாளின் நிகழ்வில் சிவகங்கை சட்டமன்ற உறுப்பினர் திருமதி குழந்தைராணி நாச்சியார் அவர்கள் மலர் தூவி அஞ்சலி செலுத்தினார்கள். அப்போது கட்சியின் நிர்வாகிகள் மற்றும் தொண்டர்கள் அனைவரும் ஒன்று கூடி உரத்த குரலில் கோசமிட்டார்கள். அதனைத் தொடர்ந்து கட்சியின் மாவட்ட செயலாளர் முத்துபாரதி நகரச் செயலாளர் தளபதிகோபி மற்றும் ஒன்றிய செயலாளர்கள் மலர் தூவி மரியாதை செலுத்தினார்கள். அதனைத் தொடர்ந்து மாவட்ட நகர பேரூர்கழகமகளிர்பிரிவு மற்றும் வார்டு கிளை நிர்வாகிகள் உறுப்பினர்கள் உள்பட அனைவரும் மலர் தூவி மரியாதை செலுத்தி னார்கள்.

# தூத்துக்குடியில் மக்கள் குறை தீர்க்கும் நாள் கூட்டத்தில் 368 மனுக்களை மாவட்ட ஆட்சியர் விஷு மகாஜன் பெற்றார்



தூத்துக்குடி மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலக கூட்டரங்கில் திங்கள்கிழமை மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் மாவட்ட ஆட்சித் தலைவர் விஷு மகாஜன் தலைமையில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் பொதுமக்களிடமிருந்து பல்வேறு கோரிக்கைகள் அடங்கிய நூற்றுக்கணக்கான மனுக்கள் பெறப்பட்டன. இன்றைய கூட்டத்தில் மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளிலிருந்து வந்திருந்தபொதுமக்கள் கல்வி உதவித்தொகை, இலவச வீட்டுமனைப்பட்டா, பட்டா மாறுதல் உத்தரவு, வரன்முறைப்படுத்தி பட்டா வழங்குதல் மற்றும் கலைஞரின் கனவு இல்லம் திட்டத்தின் கீழ் வீடு வேண்டி மனுக்களை அளித்தனர்.

மேலும், தொழில் கடனுதவி, முதியோர் உதவித்தொகை, விதவை உதவித்தொகை, புதிய வேலைவாய்ப்பு உள்ளிட்டபல்வேறு முக்கியத் தேவைகள் அடங்கிய மொத்தம் 368 கோரிக்கை மனுக்கள் பொதுமக்களிடமிருந்து நேரடியாகப் பெறப்பட்டன. இந்த மனுக்களைப் பரிசீலித்த மாவட்ட ஆட்சித் தலைவர், அவற்றின் மீது காலம்தாழ்த்தாமல் உரியத் துரித நடவடிக்கை மேற்கொள்ளுமாறு சம்பந்தப்பட்ட துறை சார்ந்த அரசு அலுவலர்களுக்கு அதிகாரப்பூர்வமாக அறிவுறுத்தினார்.

முன்னதாக, கூட்டரங்கிற்கு வர இயலாத மாற்றுத்திறனாளிகள் அமர்ந்திருந்த இடத்திற்கே மாவட்ட ஆட்சித் தலைவர் விஷு மகாஜன் நேரடியாகச் சென்று அவர்களை நேரில் சந்தித்தார். அவர்களின் பல்வேறு வாழ்வாதாரக் கோரிக்கைகள் அடங்கிய 18 கோரிக்கை மனுக்களைப் பெற்றுக்கொண்ட அவர், அவர்களின் குறைகளைக் கனிவுடன் கேட்டறிந்து உரிய நடவடிக்கை எடுப்பதாக உறுதியளித்தார்.

இந்த நிகழ்வில், மாவட்ட வருவாய் அலுவலர் மூ. குருச்சந்திரன், திருச்செந்தூர் வருவாய் கோட்டாட்சியர் ரா. கௌதம், தனித்துணை ஆட்சியர் (சமூக பாதுகாப்புத் திட்டம்) ரமணன், மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் நல அலுவலர் செந்தில்வேல் முருகன், திட்ட இயக்குநர் (மகளிர் திட்டம்) நாகராஜன், மாவட்ட மாற்றுத்திறனாளி நல அலுவலர் பிரம்மநாயகம், துணை ஆட்சியர் (பயிற்சி) மகேந்திரன் மற்றும் அனைத்துத்துறை சார்ந்த மாவட்ட அரசு அலுவலர்களும், அதிகாரிகளும் கலந்துகொண்டனர்.

# கோவையில், இந்தியாவின் முதல் ஆன்லைன் மானிட்டரிங் பிளே ஸ்கூலில் ஒற்றைப் பெற்றோர் குழந்தைகளுக்கு அனுமதிக் கட்டணம் இல்லை என தெரிவித்துள்ளனர்

கோவை சாய்பாபா காலனியில் செயல்பட்டு வரும் "டிஎன் ஹாப்பி கிட்ஸ்" நிறுவனத்தின் ஆன்லைன் மானிட்டரிங் பிளேஸ்கூல் ஒரு ஆண்டு நிறைவை முன்னிட்டு சிறப்பு ஆண்டு விழா இன்று நடைபெற்றது. இந்த விழாவில் பிற்படுத்தப்பட்டோர் அமைச்சர் சம்பத் குமார் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு கண் பரிசோதனை மற்றும் ரத்தப் பரிசோதனை முகாம்களை தொடங்கி வைத்து நிகழ்ச்சியை சிறப்பித்தார். பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய டிஎன் ஹாப்பி கிட்ஸ் நிறுவனத்தின் நிறுவனர் டாக்டர் அருண் சத்யா, கோயம்புத்தூர், திருப்பூர், ஈரோடு, கொளத்தூர், தாம்பரம் மற்றும் தர்மபுரி உள்ளிட்ட பகுதிகளில் மொத்தம் 11 பள்ளிகள் செயல்பட்டு வருவதாக தெரிவித்தார். மேலும், கோவை சாய்பாபா காலனியில் செயல்பட்டு வரும் ஆன்லைன் மானிட்டரிங் பிளே ஸ்கூல் இந்தியாவில் முதன்முறையாக அறிமுகப்படுத்தப்பட்ட தனித்துவமான கல்வி முறையாகும் என்றார். பள்ளி வளாகத்தில் குழந்தைகளின் பாதுகாப்புக்கு அதிக முக்கியத்துவம் அளிக்கப்பட்டுள்ளதாக தெரிவித்த அவர், பெற்றோர்கள் மட்டுமே சிறப்பு ஸ்கேனிங் முறையின் மூலம் பள்ளிக்குள் அனுமதிக்கப்படுவார்கள் என்றும், மற்றவர்களுக்கு அனுமதி வழங்கப்படாது என்றும் கூறினார்.மேலும்,பள்ளி முழுவதும் கேமராக்கள் மற்றும் ஆன்லைன் கண்காணிப்பு வசதிகள் அமைக்கப்பட்டுள்ளதால், குழந்தைகள் பள்ளியில் மேற்கொள்ளும் செயல்பாடுகளை பெற்றோர்கள் தங்களது செல்போன் மூலம் நேரடியாக கண்காணிக்க முடியும் என்றார்.



அமைச்சர் வழங்கிய ஆலோசனையை ஏற்று, தாய் அல்லது தந்தையை இழந்த குழந்தைகளுக்கு அனுமதிக் கட்டணம் முழுமையாக விலக்கு அளிக்கப்பட்டு கல்விக் கட்டணம் மட்டுமே வசூலிக்கப்படும் என அறிவித்தார். அதேபோல், ஸ்விக்கி, ஜோமேட்டோ நிறுவன ஊழியர்கள், ராபிடோ, ஓலா மற்றும் ஆட்டோ ஓட்டுநர்களின் குழந்தைகளுக்கு ஜூன் 1 முதல் ஜூன் 6 வரை அனுமதிக் கட்டணம் இல்லாமல் சேர்க்கை வழங்கப்படும் என்றும் தெரிவித்தார்.சாமானிய மக்களுக்கும் தரமான கல்வி கிடைக்க வேண்டும் என்ற நோக்கத்தில் இந்த முயற்சி முன்னெடுக்கப்பட்டுள்ளதாக கூறிய அவர், இந்தியாவின் முதல் ரோபோடிக் ஆன்லைன் மானிட்டரிங் பள்ளியையும் தங்களது நிறுவனம் நடத்தி வருவதாக தெரிவித்தார். மேலும்,பள்ளிக் கட்டணம் மாதம் ரூ.2,500 முதல் ரூ.3,000 வரை மட்டுமே நிர்ணயிக்கப்பட்டுள்ளதாகவும், ஒற்றைப் பெற்றோர் கொண்ட குழந்தைகளுக்கு கட்டணத்தில் சிறப்பு சலுகைகள் வழங்கப்பட உள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

# பெண் காவலருக்கு பாலியல் தொந்தரவு: காவல் ஆய்வாளர் சஸ்பெண்ட்

தூத்துக்குடி மாவட்டம் ஆறுமுகநேரி காவல் நிலையத்தில் ஆய்வாளராக பணியாற்றியவர் திலீபன். இவர், கடந்த இருதினங்களுக்கு முன்பு திருநெல்வேலி மாவட்டம் சேரன்மகாதேவி காவல் நிலையத்துக்கு பணியிட மாறுதல் செய்யப்பட்டார். இன்னும் அங்கு சென்று பணியில் சேரவில்லை.




இந்நிலையில், ஆறுமுகநேரி காவல் நிலையத்தில் பணியாற்றி தற்போது,சிங்கப்பெண் பாதுகாப்பு படைக்கு தேர்வு செய்யப்பட்டுள்ள பெண் காவலர் ஒருவருக்கு வாட்ஸ் அப் மூலம் ஆய்வாளர் திலீபன் தவறான மெசேஜ் அனுப்பியதாகவும், இதனை தட்டிக்கேட்ட அந்த பெண் காவலரின் கணவருக்கு கொலை மிரட்டல் விடுத்ததாகவும் சமூக வலைதளங்களில் தகவல் பரவியது. இதுதொடர்பாக துறைரீதியான விசாரணை நடத்த தூத்துக்குடி மாவட்ட எஸ்.பி. அபிஷேக் குப்தா உத்தரவிட்டுள்ளார்.அந்த விசாரணை நடந்து வருகிறது. இந்நிலையில், தன் மீதான புகாரை மறுத்து ஆய்வாளர் திலீபன் ஒரு வீடியோவை சமூகவலைதளங்களில் வெளியிட்டார். இதையடுத்து, ஆய்வாளர் திலீபனை தற்காலிக பணிநீக்கம் செய்து,

திருநெல்வேலி சரக டிஐஜி தேஷ்முக் சேகர் சஞ்சய் நேற்று முன்தினம் உத்தரவிட்டுள்ளார்.

# தூத்துக்குடி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் வளர்ச்சிப்பணிகள் ஆய்வுக்கூட்டம்; அமைச்சர்கள் ஸ்ரீநாத், மதன் ராஜா பங்கேற்பு!



தூத்துக்குடி மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்டரங்கில் இன்று மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை அமைச்சர் ஆ.ஸ்ரீநாத், குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் பெ.மதன் ராஜா ஆகியோர் தலைமையில் அனைத்து அரசுத் துறைகளின் செயல்பாடுகள் குறித்த ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் தூத்துக்குடி மாவட்டத்தில் உள்ள 3 வருவாய் கோட்டங்கள், 10 வட்டங்கள், 12 ஊராட்சி ஒன்றியங்கள், 3 நகராட்சிகள், 18 பேரூராட்சிகள் மற்றும் 403 கிராம ஊராட்சிகள் உள்ளிட்ட அனைத்துப் பகுதிகளிலும் செயல்பட்டு வரும் வருவாய், பேரிடர் மேலாண்மை, ஊரக வளர்ச்சி, பள்ளிக்கல்வி, மருத்துவம், வேளாண்மை, நெடுஞ்சாலைகள் மற்றும் மின்பகிர்மானக் கழகம் உள்ளிட்ட முக்கிய துறைகளின் திட்ட முன்னேற்றங்கள் குறித்து விரிவாக ஆலோசனை செய்யப்பட்டது. அமைச்சர் ஆ.ஸ்ரீநாத் பேசியதாவது: "தமிழ்நாடு முதலமைச்சரின் 'பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்' என்ற தாரக மந்திரத்தின் அடிப்படையில், மாவட்டத்தில் உள்ள தகுதியுடைய அனைத்து மக்களுக்கும் அரசுத்திட்டங்கள் சென்றடைவதை அதிகாரிகள் உறுதி செய்ய வேண்டும். அரசு அலுவலகங்களைத் தேடி வரும் பொதுமக்களை கண்ணியத்துடன் நடத்த வேண்டும். மேலும், நிலுவையில் உள்ள அனைத்து நலத்திட்டப் பணிகளையும் விரைந்து முடிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்" என்றார். இந்த ஆய்வுக் கூட்டத்தில் மீன்வளத்துறை இயக்குநர் விஜய கார்த்திகேயன், மாவட்ட ஆட்சியர் விஷு மகாஜன், மாவட்ட எஸ்பி அபிஷேக் குப்தா, சட்டமன்ற உறுப்பினர்கள் அனிதா ஆர்.ராதாகிருஷ்ணன் (திருச்செந்தூர்), ஜி.வி.மார்க்கண்டேயன் (விளாத்திகுளம்), கு.சரவணன் (திருவைகுண்டம்), க.கருணாநிதி (கோவில்பட்டி), கூடுதல் ஆட்சியர் (வளர்ச்சி) இரா.ஐஸ்வர்யா, மாநகராட்சி ஆணையர் சி.ப்ரியங்கா, மாவட்ட வருவாய் அலுவலர் மூ.குருச்சந்திரன், கோவில்பட்டி சார் ஆட்சியர் ஹிமான்ஷு மங்கள் மற்றும் அனைத்துத் துறை உயர் அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

# தென்காசி மாவட்டம் வாசுதேவநல்லூரில் சட்டமன்ற அலுவலகத்தை கனிமொழி எம்.பி. திறந்து வைத்தார்



தென்காசி மாவட்டம், வாசுதேவநல்லூரில் சட்டமன்ற உறுப்பினர் அலுவலகம் திறப்பு விழாவில் நாடாளுமன்ற குழு தலைவர் கனிமொழி ரிப்பன் வெட்டி சட்டமன்ற உறுப்பினர் அலுவலகதாதை அலுவலகத்தை திறந்து வைத்தார்.

அதனை தொடர்ந்து செய்தியாளர்களுக்கு அளித்த பேட்டியில்:*

பத்திரிகையாளர்:* ஒரே நாடு ஒரே தேர்தல் சட்டத்தை மத்திய அரசு கொண்டு வரப் போவதாக சொல்கிறார்களே?

கனிமொழி:" இல்லைங்க, இன்னும் ரிப்போர்ட்டே (Report) வரவில்லை. ஒரே நாடு ஒரே தேர்தல் ஜே.பி.சி-யில் (JPC) இருக்கிறது, இன்னும் ரிப்போர்ட்டே வரவில்லை. அதனால், அதைப்பற்றி நாம் கருத்து சொல்வதற்கில்லை. சரியா!

பத்திரிகையாளர்:* எதிர்க்கட்சிகள் திரும்பத் திரும்ப தி.மு.க-வை தான் குறை சொல்லிக் கொண்டிருக்கிறார்கள்?

கனிமொழி:* இல்லைங்க, அவர்கள் இன்னைக்கு ஆளுங்கட்சியில் இருக்கிறார்கள், அவர்கள் சரியான ஆட்சியை நடத்துவதற்கான வழிமுறைகளை தான் அறியணுமே தவிர, திராவிட முன்னேற்றக் கழகத்தையே குறை சொல்லிக் கொண்டிருப்பதனால் மக்கள் வந்து இங்கே நடந்து கொண்டிருக்கக்கூடிய தவறுகள், இங்கே நடந்து கொண்டிருக்கக்கூடிய சட்டம்-ஒழுங்கு பிரச்சனைகளை எல்லாம் மக்கள் மறந்து விடமாட்டார்கள்.

# முதலமைச்சர் விஜயின் 52 வது பிறந்தநாளை முன்னிட்டு மாணவ மாணவிகளுக்கு பதக்கம் மற்றும் பாராட்டு சான்றிதழ் வழங்கும் விழா



தமிழக முதலமைச்சர் விஜயின் 52 வது பிறந்தநாள் விழாவை முன்னிட்டு நடந்து முடிந்த 10 மற்றும் 12ம் வகுப்பில் தேர்ச்சி பெற்ற மாணவ மாணவிகளுக்கு செங்கல்பட்டு கிழக்கு மாவட்டம் திருக்கழுக்குன்றம் ஒன்றியம் சார்பில் முதலாம் ஆண்டு பாராட்டு விழா மலாலி நத்தம் பகுதியில் உள்ள தனியார் மஹாலில் நடைபெற்றது,

நிகழ்ச்சியில் 10 மற்றும் 12ம் வகுப்பு தேர்ச்சி பெற்ற 500 மாணவர்களும், சுமார் 700 க்கும் பெற்றோர்கள், என மொத்தம் 1200 நபர்கள் கலந்து கொண்டனர்,

இதில் சிறப்பு விருந்தினர்களாக செங்கல்பட்டு கிழக்கு மாவட்ட செயலாளர் தீனா, திருப்போரூர் தவெக சட்டமன்ற உறுப்பினர் விஜயராஜ், ஆகியோர்கள் கலந்து கொண்டு தேர்வில் வெற்றி பெற்ற மாணவ, மாணவிகளுக்கு பாராட்டு சான்றிதழ்கள், கேடயம் மற்றும் பதக்கங்களை வழங்கி கௌரவித்தார்கள்,

இதில் செங்கல்பட்டு கிழக்கு மாவட்ட நிர்வாகிகள் மற்றும் திருக்கழுக்குன்றம் ஒன்றிய மாமல்லபுரம் நகர திருக்கழுக்குன்ற பேரூர் நிர்வாகிகள் திருப்போரூர் நிர்வாகிகள் நூற்றுக்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டு சிறப்புத்தனர். இந்த விழாவிற்கான அனைத்து ஏற்பாடுகளையும் திருக்கழுக்குன்றம் ஒன்றியத்தை சேர்ந்த வழக்கறிஞர் ரகு, சிறப்பாக செய்திருந்தார்,



# திமுக ஆட்சியின் போது,அமைச்சர் பெயரை பயன்படுத்தி அரசு வேலை வாங்கித் தருவதாக கோடி கணக்கில் மோசடி

## விசாரிக்க மறுக்கும் காவல் ஆய்வாளர் ; முன்னாள் ராணுவ வீரர் மீது நடவடிக்கை எடுக்க வலியுறுத்தி ஆட்சியரிடம் புகார்

தென்காசி மாவட்டம் கடையநல்லூர் தாலுகாவிற்கு உட்பட்ட மலையடிகுறிச்சி பகுதியைச் சேர்ந்தபடியேறும்பெருமாள் என்பவர் உள்பட 10-க்கும் மேற்பட்ட நபர்கள் தென்காசி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் இன்று நடைபெற்ற மக்கள் குறைதீர் கூட்டத்தில் கோரிக்கை மனு அளித்தனர். இந்த கோரிக்கை மனுவில் சங்கரன்கோவில் பகுதியை சேர்ந்த செல்லசாமி என்பவர் தனக்கு தெரிந்த நபர் மூலமாக அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் வரவேற்பாளராக பணி வாங்கி தருவதாக கூறியுள்ளார்.

அதன் அடிப்படையில் கவிதா என்பவரை அறிமுகம் செய்து வைத்த நிலையில் கவிதா என்பவர் (கடந்த திமுக ஆட்சியின் போது இருந்த) அமைச்சர் மற்றும் அரசு மருத்துவமனை கல்லூரி கண்காணிப்பாளருக்கு மிகவும் நெருக்கமானவர் எனவும், அவர் மூலமாக பணி ஆணை வாங்கிவிடலாம் எனவும் ஆசை வார்த்தை கூறியுள்ளார். மேலும், கவிதா என்பவரிடம் ஒரு பணியிடத்திற்கு ரூ.10 லட்சம் தர வேண்டும் முன்னதாக ரூ.4 லட்சம் தருமாறும், பின்னர் பணி ஆணை வந்த பிறகு மீதம் ரூ.6 லட்சம் தரமாறும் கூறியுள்ளார். அதேபோல், 35க்கும் மேற்பட்ட நபர்களிடம் இதே போல் பல கோடி ரூபாய் மோசடி செய்த நிலையில், இது தொடர்பாக தென்காசி மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அலுவலகத்தில் பாதிக்கப்பட்டவர்கள் புகார் கொடுத்துள்ளனர்.

ஆனால், பல மாதங்கள் ஆகியும் இதுவரை நடவடிக்கை எடுக்காத நிலையில் பொருளாதார குற்றப்பிரிவு காவல் ஆய்வாளரான அன்னபூரணி என்பவர் இதுவரை மோசடியில் ஈடுபட்ட நபர்களை அழைத்து விசாரணை நடத்தாமல் புகார் கொடுத்ததங்களை மிரட்டுகிறார் எனவும், ஆகவே மோசடியில் ஈடுபட்ட முன்னாள் ராணுவ வீரரான செல்வசாமி மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் எனக் கூறி பாதிக்கப்பட்டவர்கள் ஆட்சியர் அலுவலகத்தில் இன்று புகார் கொடுத்தது குறிப்பிடத்தக்கது.

## கோவை சிங்காநல்லூர் பகுதியில் உள்ள, விஜிஎம் மருத்துவமனையில்

# உலக செரிமான ஆரோக்கிய தினத்தை முன்னிட்டு வி.ஜி.எம் ஐபிடி க்ளினிக் மையத்தின் துவக்க விழா நிகழ்ச்சி



கோவை சிங்காநல்லூர் பகுதியில் உள்ள விஜிஎம் மருத்துவமனையில், உலக செரிமான சுகாதார தினத்தை முன்னிட்டு, குடல் அழற்சி நோயால் பாதிக்கப்பட்ட நோயாளிகளுக்கு சிறப்பு சிகிச்சை அளிப்பதில் தனது அர்ப்பணிப்பை வலுப்படுத்தும் விதமாக, விஜிஎம் குடல் அழற்சி நோய் சிகிச்சை மையங்களைத் திறந்து வைத்தது. இந்த சிகிச்சை மையத்தை, பத்ம பூஷன் டாக்டர் கே.ஆர். பழனிசாமி, மூத்த இரைப்பை குடல் நிபுணர் திறந்து வைத்தார்.

குரோன் நோய் மற்றும் அல்சரேட்டிவ் கோலிடிஸ் ஆகியவற்றை உள்ளடக்கிய குடல் அழற்சி நோய், இந்தியாவில் வளரிளம் பருவத்தினர் மற்றும் இளைஞர்களிடையே அதிகளவில் கண்டறியப்படுகிறது. குறிப்பாக, தொடர்ச்சியான வயிற்றுப்போக்கு, மலத்தில் இரத்தம், வயிற்று வலி, காரணமின்றி உடல் எடை குறைதல், இரத்த சோகை அல்லது சோர்வு போன்ற அறிகுறிகளை அனுபவிக்கும் நபர்களுக்கு, நோயை முன்கூட்டியே கண்டறிவதன் முக்கியத்துவத்தை நிபுணர்கள் வலியுறுத்தினர்.

புதிதாகத் தொடங்கப்பட்ட இந்த சிகிச்சை மையம், மேம்பட்ட எண்டோஸ்கோபிக் நோயறிதல், உயிரியல் சிகிச்சைகள், ஊட்டச்சத்து ஆதரவு மற்றும் சிக்கலான குடல் அழற்சி நோய்களுக்கான குறைந்தபட்ச ஊடுருவல் அறுவை சிகிச்சை மேலாண்மை உள்ளிட்ட விரிவான பல்துறை சிகிச்சையை வழங்குகிறது. இந்த முன்னெடுப்பின் ஒரு பகுதியாக, வி.ஜி.எம் மருத்துவமனை, நோயாளிகள் மற்றும் பராமரிப்பாளர்கள் குடல் அழற்சி நோயை (IBD) நன்கு புரிந்து கொண்டு நிர்வகிக்க உதவும் வகையில் தனித்துவமாக வடிவமைக்கப்பட்ட, 'என் குடல், என் குரல்' என்ற மாதாந்திர நோயாளி ஆதரவு மற்றும் கல்வி மன்றத்தையும் அறிமுகப்படுத்தியது. இந்நிகழ்ச்சியில் பேசிய டாக்டர் வி.ஜி. மோகன் பிரசாத், வி.ஜி.எம் குடல் அழற்சி நோய் சிகிச்சை மையங்கள், குடல் அழற்சி நோயின் ஆரம்ப அறிகுறிகள் மற்றும் நவீன சிகிச்சை முறைகள் குறித்த பொது விழிப்புணர்வை மேம்படுத்துவதோடு, ஆதார அடிப்படையிலான, நோயாளி மையப்படுத்தப்பட்ட சிகிச்சையையும் வழங்கும் என்று குறிப்பிட்டார். டாக்டர் வம்சி மூர்த்தியின் அறிமுகவுரையுடன் தொடங்கிய அறிவியல் அமர்வில், டாக்டர் மதுரா பிரசாத் சுமன் குடல் அழற்சி நோய் மற்றும் குடல் நுண்ணுயிரிகள் குறித்தும், டாக்டர் எஸ். திவ்யசாரதி ஊட்டச்சத்து மற்றும் நல்வாழ்வு குறித்தும், மற்றும் குடல் அழற்சி நோய் ஆலோசகர் சுமந்திரன் நோயாளிகளுக்கான உளவியல் ஆதரவு குறித்தும் விளக்கமளித்தனர். இந்நிகழ்ச்சியை டாக்டர் மித்ரா பிரசாத் ஒருங்கிணைத்தார், மேலும் டாக்டர் சி.பி.எஸ்.சுமன் நன்றியுரை வழங்கினார்.

# "மக்கள் பிரச்சினைகளை தீர்ப்பதில் ஆர்வம் இல்லை" விஜய் அரசு மீது தமிழிசை சாடல்



சென்னை: "முதல்வர் விஜய் இன்னும் தேர்தல் பிரச்சார மூடில் இருந்து வெளியேவராதது மாதிரி தோன்றுகிறது. போர்க்கால அடிப்படையில் பெண்களின் பாதுகாப்பை உறுதி செய்ய வேண்டும்" என பாஜக மூத்த தலைவர் தமிழிசை கூறியுள்ளார்.

இது குறித்து செய்தியாளர்களிடம் அவர் கூறும்போது, "விஜய் தலைமையிலான தவெக அரசுக்கு, மற்ற கட்சிகளிடமிருந்து ஆதரவை பெறுகின்ற ஆர்வம், மக்களுக்கான பிரச்சினைகளை தீர்ப்பதில் இல்லையோ என எண்ணத் தோன்றுகிறது.

திருவள்ளுவர் காவி நிறம்தான் உடுத்தியிருக்கிறார்; திருநீறு தான் வைத்திருந்தார். ஆரம்ப கால புத்தகங்கள் எல்லாம் இதைத்தான் உருவகப்படுத்தி இருக்கிறது. நூலகத்துக்கு சென்று பாருங்கள். 60, 70 வருடங்களுக்கு முன்னால் பதிப்பிக்கப்பட்ட திருவள்ளுவர் காவியுடைதான் அணிந்து இருக்கிறார். இதுதான் அசல்.

பாஜக மக்களால் நிராகரிக்கப்படவில்லை. ஒரு சின்ன பின்னடைவுதான். நிச்சயமாக நாங்கள் மீண்டு வருவோம். தமிழகத்தில் பாஜகவுக்கு தனி இடம் உண்டு. நாங்கள் மக்களுக்காக பேசுவர்கள். இன்று அரசியல் சூழல் மாறியிருக்கிறது. முதல்வரே தோற்கக்கூடிய நிலை இருக்கிறது.

முதல்வர் விஜய் நேற்று திருச்சி சென்றிருந்தார். அவர் இன்னும் தேர்தல் பிரச்சார மூடில் இருந்து வெளிய வராத மாதிரி தோன்றுகிறது. முதல்வர் ஆகிவிட்டார்; மக்கள் உங்கள் வாய்ப்புகளை கொடுத்திருக்கின்றனர். போர்க்கால அடிப்படையில் பெண்களின் பாதுகாப்பை உறுதி செய்ய வேண்டும். எதிர்க்கட்சிகள் கேள்வி கேட்கத்தான் செய்வார்கள்" என்று அவர் கூறியுள்ளார்.

# தமிழ்நாட்டில் உள்ள பள்ளி வாசல்களில் பணியாற்றும் உலமாக்களுக்கு இருசக்கர வாகனம் வாங்க மானியம் வழங்கும் திட்டம்

உலமாக்கள் பணியாளர்கள் நல வாரியத்தில் பதிவு பெற்ற 18 வயது முதல் 60 வயது வரை உள்ள உலமாக்களுக்கு இருசக்கர வாகனம் வாங்க மானியத் தொகை ரூ.50,000/- வழங்க தமிழ்நாடு அரசால் ஆணையிடப்பட்டுள்ளது. தமிழ்நாட்டிலுள்ள பள்ளிவாசல்களில் பணியாற்றும் பேஷ் இமாம்கள், ஆலிம்கள், அரபி ஆசிரியர்கள் / ஆசிரியைகள் உள்ளிட்ட உலமாக்களிடம் இருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகிறது. இருசக்கரவாகனத்திற்கான மானியம் பெற மாவட்ட ஆட்சியர் அலுவலகங்களில் இயங்கும் மாவட்ட பிற்படுத்த ப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர்நலஅலுவலர்/சிறுபான்மையினர் நல அலுவலரிடம் படிவத்தினை பெற்று ஆவணங்களுடன் விண்ணப்பித்து ஒப்புதல் பெற்ற பின்னரே பயனாளி இரு சக்கர உரிய வாகனம் வாங்க வேண்டும்.பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை மற்றும் சிறுபான்மையினர் நலஅலுவலகம்மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் / சிறுபான்மையினர் நல அலுவலகங்களில் 30.06.26 -ம் தேதிக்குள் உரிய ஆவணங்களுடன் சமர்ப்பிக்க வேண்டும்.




நேற்று (02.06.2026) சென்னை, தலைமைச் செயலகத்தில், கைத்தறி, துணிநூல் மற்றும் கதர்த் துறை அமைச்சர் ம. விஜய் பாலாஜி தலைமையில், கைத்தறி, துணிநூல் மற்றும் கதர்த் துறையின் செயல்பாடுகள் குறித்து ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில், கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறையின் அரசு முதன்மைச் செயலாளர் தி.ந.வெங்கடேஷ், துணிநூல் ஆணையர் வெ. ஷோபனா,கோஆப்டெக்ஸ் மேலாண்மை இயக்குநர் கவிதா ராமு, தமிழ்நாடு கதர் மற்றும் கிராமத் தொழில் வாரியத்தின் தலைமைச் செயல் அலுவலர் (மு.கூ.பொ.) அமிர்தஜோதி மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் கலந்துக் கொண்டனர்.



கைத்தறிதுணிநூல்மற்றும்கதர்த்துறைஅமைச்சர்விஜய்பாலாஜியைமேல்மருவத்தூர்ஆதிபராசக்திவாரவழிபாட்டு மன்றத்தின் ஈரோடு மாவட்ட தலைவரும் குருபீட தலைவருமான நடராஜன் தலைமையில் மரியாதை நிமித்தமாக சந்தித்து மேல்மருவத்தூர் அம்மா அருள் பிரசாதத்தை வழங்கி வாழ்த்து தெரிவித்தனர். அருகில் ஈரோடு மாவட்ட நிர்வாகிகள் மற்றும் குருபீட நிர்வாகிகள் உடன் இருந்தனர்.

# 'Will fight or die': Mamata Banerjee holds massive dharna in Kolkata against postpoll violence



*Former West Bengal chief minister and TMC chief Mamata Banerjee on Tuesday held a massive 'dharna' (protest) in central Kolkata against alleged post-poll attacks on party workers and leaders, including MP Abhishek Banerjee.*

*Banerjee reached the dharna site at Esplanade's Y-channel after the TMC's appeal to hold the protest at the adjacent Rani Rashmoni Road was turned down by the Kolkata Police, the party claimed.*

*"I will fight or die," she chanted at the dharna site.*

*"We were not given permission to set up a stage or use microphones," Banerjee said, addressing supporters through a megaphone.*

*The demonstration witnessed massive noisy scenes as TMC workers and supporters raised slogans during the former chief minister's address.*

*Banerjee was joined by several senior party leaders, including Madan Mitra, Derek O'Brien, Kalyan Banerjee and Dola Sen.*

*The TMC chief said that the dharna, organised over the alleged attack on her nephew and TMC MP Abhishek Banerjee on Saturday, claims of post-poll violence and the eviction of hawkers, would continue until evening as planned.*



## ஈரோடு மாவட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி வருகின்ற 4ந் தேதி அன்று பள்ளிகள் திறக்கப்படுவதை முன்னிட்டு

# தூக்கநாய்கன்பாளையம் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட பங்களாபுதூர் ஊராட்சி ஒன்றிய துவக்கப்பள்ளியில் ஆய்வு மேற்கொண்டார்

ஈரோடு மாவட்டம், தூக்கநாய்கன்பாளையம், பங்களாபுதூர், ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி நேற்று (02.06.2026) பள்ளிகள் திறக்கப்படுவதை முன்னிட்டு தூக்கநாய்கன்பாளையம் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட பங்களாபுதூர் ஊராட்சி ஒன்றிய துவக்கப்பள்ளியில் ஆய்வு மேற்கொண்டார்.

தமிழ்நாடு முழுவதும் முழுஆண்டுத் தேர்வுகள் நடைபெற்று ஏப்ரல் 16 முதல் பள்ளிகளுக்கு கோடை விடுமுறை அளிக்கப்பட்டு இருந்தது தற்பொழுது வருகின்ற 04.04.2026 வியாழக்கிழாமையன்று பள்ளிகள் திறக்கப்படும்எனதமிழ்நாடு அரசு அறிவிப்பை தொடர்ந்து பள்ளிகளின் சுத்தம் செய்யப்படும் பணிகள் நடைபெற்று வருகின்றது. மேலும் பள்ளிகளில் குடிநீர் வசதி, கழிப்பிட வசதி மேற்கொள்ப்பட்டு வருகிறது. 4 மின்சார வசதி குறித்து ஆய்வு அவர்கள் தூக்கநாய்கன்பாளையம் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட பங்களாபுதூர் ஊராட்சி ஒன்றிய துவக்கப்பள்ளியில் ஆய்வு மேற்கொண்டார். இப்பள்ளியில் தமிழ்நாடு அரசால் விலையில்லமாணவ,மாணவிகளுக்கு வழங்கப்பட்டுள்ள பாடப்புத்தங்கள், புத்தகபைகள் மற்றும் சீருடைகள் குறித்து பதிவேடுகளின் பதியப்பட்டுள்ளதை ஆய்வு மேற்கொண்டார்.

மேலும் அப்பள்ளியில் குடிநீர் வசதி கழிப்பிட வசதி, மின்சார வசதி கதவுகளின் நிலைபாடு, மாணவர்களின் இருக்கைகளின் நிலை குறித்து ஆய்வு கொண்டார். மேலும் காலை உணவு திட்டம், மதிய உணவு திட்டம் பள்ளியில் பயிலும் மாணவ, மாணவிகளின் எண்ணிக்கை குறித்து கேட்டறிந்தார். மேலும் சுற்றுப்புறத்தை சுத்தப்படுத்தி தூய்மையாக வைத்துக்கொள்ளவும் அங்குள்ள அலுவலர்களிடம் அறிவுறித்தினார். இந்த ஆய்வின் போது தூக்கநாய்கன்பாளையம்வட்டாரவளர்ச்சி அலுவலர்கள் மாதவன்,இந்தராணி உட்பட துறைசார்ந்தஅலுவலர்கள் உடனிருந்தனர்.

# ஈரோடு நகர காவல் நிலைய சரகத்தில் போதை மாத்திரைகள் வைத்திருந்த 4 நபர்கள் கைது



ஈரோடு மாவட்டத்தில் சட்ட விரோத செயல்களை கட்டுப்படுத்தும் நோக்கில், ஈரோடு மாவட்ட காவல் கண்காணிப்பாளர் D.V.கிரண் ஸ்ருதி, நேரடி மேற்பார்வையில் பல்வேறு தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இந்நிலையில்(01.06.2026)அன்று ஈரோடு, நாச்சியப்பா ரோடு, பாய் மீன் கடை அருகில் சட்டவிரோதமாக போதை மாத்திரைகள் விற்பனைக்காக வைத்துக் கொண்டிருுப்பதாககிடைத்ததகவலின்படி, ஈரோடு நகர காவல் நிலைய போலீஸார் ஈரோடு, நாச்சியப்பா ரோடு பகுதிகளில் ரோந்து மேற்கொண்டு அங்கு சந்தேகப்படும்படியாக நின்று கொண்டிருந்த கௌரிசங்கர்(22), த/பெ.சக்திவேல், 4/54, பம்பிங் ஸ்டேசன் ரோடு, திருநகர் காலனி, ஈரோடு,

விக்னேஷ் (22), த/பெ.தியாகராஜன், 1/49, அண்ணா நகர், ஆவரன்காடு, பள்ளிப்பாளையம், நாமக்கல் மாவட்டம் (தற்போது IOB Bank அருகில்,திருநகர் காலனி, ஈரோடு.

முகமது ஜாமீல்(21), த/பெ.நிதார், 27/11, மாதவக்காடு, கிருஷ்ணம்பாளையம், ஈரோடு.

தீபக் (24), த/பெ. பழனிச்சாமி,47-18,கமலா நகர், திருநகர் காலனி, ஈரோடு ஆகியோர்களை பிடித்து சோதனை செய்தபோது அவர்கள் வசமிருந்த ரூ.2,70,000/-மதிப்புள்ள 8100 எண்ணிக்கையிலான TAPENTADOL TABLET மற்றும் TN 33 BM 1078 Activa இருசக்கர வாகனத்தை பறிமுதல் ஈரோடு நகர காவல் நிலையம் கொண்டு வந்து வழக்கு பதிவு செய்யப்பட்டு நீதிமன்ற காவலுக்கு அனுப்பப்பட்டது. மேலும் இதுபோன்ற குற்ற சம்பவங்களில் ஈடுபடுவர்களின் மீது சட்டப்படி நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை ஈரோடு மாவட்ட காவல் துறை சார்பில் தெரிவிக்கப்படுகிறது.



நேற்று (02.06.2026) சென்னை, தலைமைச் செயலகத்தில், கைத்தறி, துணிநூல் மற்றும் கதர்த் துறை அமைச்சர் ம. விஜய் பாலாஜி அவர்கள் தலைமையில் நடைபெற்ற கைத்தறி, துணிநூல் மற்றும் கதர்த் துறையின் செயல்பாடுகள் தொடர்பான ஆய்வுக் கூட்டத்தில், கோஆப்டெக்ஸ் நிறுவனத்தால் தயாரிக்கப்படும் உடனடியாக அணியக்கூடிய சேலைகள் மற்றும் இதர உடைகள் உள்ளிட்ட தயாரிப்புகளை பார்வையிட்டார். இக்கூட்டத்தில், கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறையின் அரசு முதன்மைச் செயலாளர் தி. ந.வெங்கடேஷ், துணிநூல் ஆணையர் வெ. ஷோபனா,கோஆப்டெக்ஸ் மேலாண்மை இயக்குநர் கவிதா ராமு, தமிழ்நாடு கதர் மற்றும் கிராமத் தொழில் வாரியத்தின் தலைமைச் செயல் அலுவலர் (மு.கூ.பொ.) அமிர்தஜோதி மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

Printed by, Sri Simmha Enterprises, Published by M.APROSE, onbehalf of M.APROSE, printed at THIRUVALLUR, and Published at ,1, THATTANKAADU 4TH STREET, KONGU VELAAN NAGAR, VTC PERIYASEMUR, PO: PERIA SEMUR, ERODE, TAMIL NADU - 638004 ,Editor HARI KRISHNAN M.